# ஆதாமைப் போலவே, நாம் யாவரும் பாவம் செய்திருக்கிறோம்


**நமது பாவம் நம்மை குற்றமுள்ளவர்கள் ஆக்கியது, அவமானத்தை உண்டாக்கியது, அடிமைத்தனத்தில் ஆழ்த்தியது**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் S4b பாடத்தை வாசிக்கவும்

**ஜெபம்:** கர்த்தராகிய இயேசுவே! எங்கள் பாவத்தின் விளைவில் இருந்து எங்களை விடுதலை ஆக்கினீர். தயவு செய்து, எங்கள் பாவத்தை எதிர்கொள்ளவும், பாவத்திற்கு எதிரான உமது வெற்றியினால் வாழவும் எங்களுக்கு உதவி செய்யும்.

தற்போதைய தேவைகளுக்கும், வட்டார சம்பிரதாயங்களுக்கும் பொருந்தும் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளுக.

## 1. பாவத்தை உங்கள் சபை எதிர்கொள்ள உதவும் படியாக ஜெபத்தாலும் வார்த்தையாலும் உங்களை ஆயத்தம் செய்க.



எல்லாரும் பாவத்தோடு பிறந்தோம், எல்லோரும் பாவிகளே, யாவரும் பாவம் செய்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது (1 யோவான் 1:8-10).

எங்கிருந்து பாவம் வந்தது என்பதை **ஆதி. 3:1-9**ல் காண்க.

- நமது ஆதி பெற்றோர்களிடம் சாத்தான் என்ன பொய் கூறினான்? *(4 & 5)*
- சாத்தானுக்கு எதிராக தேவன் அறிவித்த தண்டனை என்ன? *(13-15)*
- நமது முன்னோர்களுக்கு எதிராக தேவன் அறிவித்த தண்டனை என்ன? *(16-19)*

தாவீது இராஜா தனது பாவத்தைக் குறித்து என்ன கூறினான் என்பதை **சங். 51:1-5**ல் காண்க.

- தனது தேவை என்ன வென்று அவன் அறிந்து கொண்டாள்? *(1-2)*
- தனது பாவத்தைக் குறித்து என்ன கூறினான்? *(3)*
- யாருக்கு எதிராக அவன் பாவம் செய்தான்? *(4)*
- அவன் எப்போது ஒரு பாவி ஆனான்? *(5)*

நமது பாவம் எவ்வளவு அபாயகரமானது என்பதை **எபி. 12:1-4** ல் காண்க.

- விசுவாசிகளாகிய நாம் எவ்வளவு தூரம் பாவம் செய்கின்ற அபாயத்தில் இருக்கிறோம்? *(1)*
- நம்முடைய பாவத்தினால் சிலுவையில் இயேசு சகித்தது என்ன? *(2)*
- பிற பாவிகளால் நமக்கு நேரிடக் கூடியது என்ன? *(3)*
- சில சமயம் நாம் ஏன் பாவத்திற்கு அடிபணிந்து விடுகிறோம்? *(4)*

**நம்முடைய பாவம் மூன்று பயங்கரமான விளைவுகளைக் கொண்டு வந்தது:**

குற்றம், அவமானம், அடிமைத்தனம்.

1) **குற்றம்:** நாம் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகள்.

- ஒரு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு ஒரு நீதிபதியால் தண்டிக்கப்படும் குற்றவாளியைப் போல, நாம் நமது பாவங்களுக்காக தேவனிடம் கணக்கு தர வேண்டும்.
- அதிர்ஷ்டவசமாக, கிறிஸ்து நமது பாவங்களை சிலுவைக்கு கொண்டு சென்று, அங்கே நம்முடைய இடத்தில் அவர் மரித்தார். எனவே, இயேசுவை நம்பும் எல்லாருடைய பாவங்களையும் தேவன் மன்னிக்கிறார்.



2) **அவமானம்:** நாம் தேவனுக்கு முன்பாக அவமானப்பட்டு நிற்கிறோம்.

- அவமானகரமான ஒன்றை செய்யும் போது ஒரு மனிதன் பிடிபடுவது போல, இறுதித் தீர்ப்பில் அவர் நமது பாவங்களை எல்லாம் வெளிப்படுத்தும் போது மனிதர்களான நாம் மிகுந்த அவமானம் அடைந்து தேவனுக்கு முன்பாக நிற்போம்.
- ஆயினும் - தேவனுக்கு நன்றி - நமக்கு பதிலாக இயேசு கிறிஸ்து பொதுமன்றத்தில் அவமானம் அடைந்ததால், அவர் திரும்பி வரும்போது, நாம் அவமானம் அடைய மாட்டோம்.

3) **அடிமைத்தனம்:** பாவகரமான காரியங்களுக்கு நாம் அடிமையானோம்.

- ஒரு குடிகாரன் குடிப்பதை நிறுத்த முடியாமல் அவனது குடும்பமே அழிந்து போவதுபோல, நாம் யாவரும் பாவகரமான, மது, போதைமருந்து, மந்திரம், பொய் தெய்வங்கள், ஒழுக்கக்கேடுகள், தவறான உறவுகள் ஆகியவற்றிற்கு அடிமையானோம்.
- ஆனால் தேவனுக்கே துதி உண்டாகட்டும். இயேசு நமக்காக சிலுவையில் மரித்த போது, அவர் பிசாசின் வல்லமையை அழித்து, அடிமைத் தனத்தில் இருந்து நமக்கு விடுதலை அளித்தார்.

## 2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.

மன்னிப்பும் விடுதலையும் தேவைப்படும் உங்கள் சபை உறுப்பினர்களைப் பற்றி இணைந்து விவாதிக்கவும்.

- தாங்கள் செய்த பாவத்திற்காக எந்த உறுப்பினர்களுக்கு தேவமன்னிப்பை தழுவிக் கொள்வது அவசியமாகிறது? சென்று அவர்களை சந்தித்து, தங்கள் பாவங்களை அறிக்கையிட உதவி, ஐக்கிய விருந்தைப் பரிமாறி, அவர்களோடு ஜெபித்து மன்னிப்பை அறிந்து கொள்ளும்படி செய்க.
- தங்களுடைய பழைய வாழ்க்கை முறையைக் குறித்து வெட்கப்படும் உறுப்பினர்கள் யார்? அவர்களை சென்று சந்தித்து, இயேசு எவ்வாறு அவர்களுக்காக அவமானப்படுத்தப்பட்டார் என்பதை விளக்கி, அவர்கள் தங்கள் அவமானத்தை மேற்கொள்ள ஜெபிக்கவும்.
- கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையான உறுப்பினர்கள் யார்? அவர்களை சென்று சந்தித்து அந்த கெட்ட பழக்கங்களை விட்டுவிட உதவவும். நீங்கள் அவர் மேல் தொடர்ந்து பரிவும் கவனமும் காட்டுவதை உறுதிப்படுத்தி, அவர்களது விடுதலைக்காக ஜெபிக்கவும்.

இந்த எல்லா உறுப்பினர்களும் 1 யோவான். 2:28 ஐ மனப்பாடம் செய்ய உதவவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

ஆதி 3 ம் அதிகாரத்தில் இருந்து ஆதாம் ஏவாளின் கதையையும், வீழ்ச்சியையும் கூறுக. பகுதி 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

தாவீது தன் பாவத்தைக் குறித்துக் கூறியதையும், பகுதி 1 ல் உள்ள அதுகுறித்த கேள்விகளையும் கேட்கவும்.

ரோமர் 3:19-23, 1 யோவான் 5:16-19, எபிரேயர் 12:1-4 ஆகிய வேத பகுதிகளின் சத்தியங்களைக் கூறி பகுதி 1 ல் உள்ள அதே கேள்விகளைக் கேட்கவும்.

அண்மையில், கெட்ட பழக்கங்களில் இருந்தும் அசுத்த ஆவிகளிடம் இருந்தும் விடுதலை ஆனவர்கள் சாட்சி கூறவும்.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த நாடகம் மற்றும் கேள்விகளை வழங்கலாம்.

அப்.19:11-20 ஐ வாசிக்கவும் அல்லது நடிக்கவும். மக்கள் எவ்வாறு தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மந்திரவாதத்தில் இருந்த தங்கள் அடிமைத்தனத்தை விட்டொழித்தனர் என்பதை விளக்குக. இவ்வாறு அவர்கள் மன்னிக்கப்பட்டு, அவமானத்தை மேற்கொண்டு, தீய ஆவிகளின் பிடியில் இருந்து விடுபட்டனர்.

ஆதி. 3:6-10,21 ஆகிய வசனங்களை வாசித்து **கர்த்தரின் பந்தி**யை அறிமுகப் படுத்தவும்.

ஆதாமும் ஏவாளும் அத்தி இலையைத் தைத்து தங்கள் நிர்வாணத்தை மூட முயன்றனர். ஆனால் தேவன் தோல் ஆடைகளை அவர்களுக்கு உடுத்தினார். ஏனெனில் நமது பாவங்கள் குற்ற மற்ற ஒரு பலியின் இரத்தத்தினால் தேவ பார்வையில் இருந்து மறைக்கப்பட வேண்டும். நமது பாவத்தை எல்லாம் சுமந்து தீர்க்க தேவ ஆட்டுக்குட்டி இயேசு என்பதை இந்த மிருக பலி முன்னறிவித்தது.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைக்கவும். பாவங்களை அறிக்கை இட்டு பாவ மன்னிப்பிற்காகவும் விடுதலைக்காகவும் ஜெபிக்கவும்.

**மனன வசனம்** ஏசாயா 1:18.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net